2. விதி 110-ன்கீழ் அறிக்கை

ஜல்லிக்கட்டு தடையை நீக்கக் கோரும் போராட்டத்தின்போது சேதமடைந்த நடுக்குப்பம் மீன் சந்தையைச் சீரமைத்தல், போராட்டத்திற்கு காரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுத்தல், உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைத்தல்—முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள். பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் மற்றும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீனவர்களின்மீது தனி அக்கறை செலுத்தி, அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட பல்வேறு திட்டங்களை, தீட்டி செயல்படுத்தினார்கள். உலகின் எந்தப் பகுதியில் தமிழக மீனவர்கள் பாதிப்புக்கு உட்படுத்தப்பட்டாலும், அவர்களின் கண்ணீரைத் துடைத்திட நடவடிக்கை எடுத்து வந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, மீனவர்களின்பால் அதே அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது.*

27-1-2017 அன்று நான் இந்த அவையில் ஜல்லிக்கட்டு தடையை நீக்கக் கோரி சென்னை மெரினா கடற்கரையில் நடத்தப்பட்ட காத்திருப்புப் போராட்டம் பற்றியும், இந்தப் போராட்டத்தில் சமூக, தேச விரோத சக்திகள் ஊடுருவியிருந்தது பற்றியும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன்.

23-1-2017 அன்று காலை பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் துறையினர் ஜல்லிக்கட்டுக்கான தடைகள் அனைத்தும் சட்டப்படி நீக்கப்பட்டுவிட்டன என விளக்கிக் கூறி, போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அமைதியாகக் கலைந்து செல்லும்படி எடுத்துக் கூறியவுடன், பெரும்பாலானோர் கலைந்து சென்று

விட்டனர். அன்று சென்னை, நடுக்குப்பத்தில் சட்ட விரோத கும்பல் ஒன்று கூடி மெரினா நோக்கிச் செல்ல முற்பட்ட போது, பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் துறையினர் அவர்களை கலைந்து செல்லுமாறு தெரிவித்தும், அக்கும்பல் கலைந்து செல்லாமல் காவல் துறையினர்மீது கற்கள் மற்றும் பெட்ரோல் நிரப்பிய பாட்டில்களை வீசியது. இச்சம்பவத்தில், நடுக்குப்பம் மீன் மார்க்கெட் தீயில் எரிந்து சேதமடைந்தது. காவல் துறையினர் அவர்களை கலைந்து போகச் சொல்லி எச்சரித்தும் கேட்காமல், அவர்கள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டதால், காவல் துறையினர், தக்க எச்சரிக்கைக்குப் பின்பு, குறைந்தபட்ச பலத்தை உபயோகித்து அவர்களை கலைந்து போகச் செய்தனர் என்ற விவரத்தையும் நான் எடுத்துக் கூறியிருந்தேன்.

சமூக விரோத கும்பலின் நடவடிக்கை காரணமாக மீனவர் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது என்பதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நடைபெறுகின்ற இந்த அரசு உறுதியாக உள்ளது. எனவே, எனது அறிவுரையின்படி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களின் தலைமையில் அரசுச் செயலர், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, மீன் வளத் துறை ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை மாநகராட்சி துணை ஆணையர், தலைமைப் பொறியாளர், மீன்பிடித் துறைமுகக் கோட்டம், மாநகராட்சி பொறியாளர்கள் மற்றும் இதர அரசு அதிகாரிகள் ஜல்லிக்கட்டு போராட்டத்தின்போது சேதமடைந்த நடுக்குப்பம் மீன் சந்தையை 28-1-2017 அன்று நேரில் சென்று ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது பாதிக்கப்பட்ட மீன் சந்தையை முழுவதும் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட அப்பகுதி மீனவர்களின் குறைகளையும் கேட்டறிந்தனர். அப்போது நடுக்குப்பம் மீன் விற்பனை சந்தை முழுவதுமாக சேதமடைந்ததைக் கண்டறிந்தனர். மீனவர்கள் வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்த மீன் விற்பனை சந்தையை உடனடியாகச் சீரமைத்துத் தருவது அவசியமாகும்.

இதனடிப்படையில், தற்காலிகமாக மீன் விற்பனை செய்ய ஏதுவாக சாலையின் தெற்குப் பகுதியில் மீன் வளத் துறைமூலம் தற்காலிக சந்தை அமைக்கப்படும். இது இன்னும் ஓரிரண்டு நாட்களில் முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜனவரி 31] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேலும், நிரந்தர மீன் விற்பனை சந்தை ஒன்று அந்தப் பகுதியில் அமைத்துத் தரப்படும். சென்னை பெருநகர மாநகராட்சிமூலம் சாலையின் வடக்குப் பகுதியில் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நிரந்தர, நவீன மற்றும் சுகாதாரமான மீன் சந்தை உடனடியாக அமைத்துத் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக விரோதிகளால் நிகழ்த்தப்பட்ட வன்முறை சம்பவங்களில் நடுக்குப்பம் மட்டுமல்லாது அருகிலுள்ள மாட்டாங்குப்பம் மற்றும் அயோத்திகுப்பம் மீனவர்களின் உபகரணங்கள் மற்றும் இதர பொருட்கள் சேதமடைந்துள்ளன.

முற்பகல் 11-15

பாதிக்கப்பட்ட மீனவர்களின் சேதமடைந்த உபகரணங்கள் குறித்து, மீன் வளத் துறை அலுவலர்கள் உடனடியாக கள ஆய்வு செய்து, மதிப்பீடு செய்வார்கள். இந்த சேத மதிப்பீட்டின் அடிப்படையில் மீனவர்களுக்கு உரிய நிவாரணம் விரைவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

23-1-2017 அன்று நடந்த வன்முறை சம்பவங்களில் தொடர்புடையவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்னையில் 312 பேர்களும், பிற மாவட்டங்களில் 175 பேர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். சென்னையில் கைது செய்யப்பட்டவர்களில் 21 பேரும், இதர மாவட்டங்களில் 15 பேரும் மாணவர்கள். மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, இம்மாணவர்கள் சம்பந்தப்பட்டுள்ள வழக்குகளிலிருந்து அவர்களை முழுமையாக விடுவிக்க சட்டப்பூர்வ நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் காவலர்கள், தீ வைத்தல், வன்முறை போன்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டது போன்று சமூக வலைதளங்களில் பரவியுள்ள புகைப்படங்கள் மற்றும் காணொளிக் காட்சிகள் தொடர்பாக, சென்னை மாநகர கூடுதல் ஆணையரின் நேரடி மேற்பார்வையில் சென்னை மாநகர காவல் துறையின் கணினி வழி குற்றப் பிரிவினரால் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு

வருகிறது. இவை கணினி மற்றும் தடயவியல் வல்லுநர்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ்விசாரணையின் முடிவில் காவல் ஆளிநர்கள் மேற்கூறிய சம்பவங்களில் ஈடுபட்டுள்ளது உறுதிபடுத்தப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜல்லிக்கட்டு நடைபெற வேண்டி நடத்தப்பட்ட போராட்டங்களின் தொடர்ச்சியாக 23-1-2017 அன்று சென்னை, மதுரை, கோவை மற்றும் தமிழகத்தின் இதர பகுதிகளில் நடந்த சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளின் உரிய காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளை விசாரிப்பதற்கு தனி விசாரணை ஆணையம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் இவ்விசாரணையை மேற்கொள்வார். இந்த விசாரணை ஆணையத்திற்கு கீழ்க்கண்ட ஆய்வு வரம்புகள் நிர்ணயிக்கப்படும்:

1) 23-1-2017 அன்று நடந்த சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளுக்கு, மூலமாக இருந்த காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளைக் கண்டறியவும், அதனால் பொது மற்றும் தனியாரின் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதாரங்கள் குறித்தும் விசாரித்தல்;

2) சம்பந்தப்பட்ட காவல் துறையினரால் உரிய அளவில் பலப்பிரயோகம் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்பட்டனவா என்பது குறித்து விசாரித்தல்;

3) காவல் துறையினரின் செயல்பாட்டில் அத்துமீறல் இருந்ததா என்பதை விசாரிக்கவும்; அவ்வாறெனில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஆலோசனை வழங்குதல்;

4) இனி வரும் காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்வுகளைத் தடுப்பதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைத்தல்;

இவ்விசாரணை ஆணையம் தனது விசாரணையை முடித்து, அரசிற்கு மூன்று மாத காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படும் என தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)